Tamilmanam International Research Journal of Tamil Studies
Volume 1, Issue 2, November 2024

ISSN: 3049-0723 Online

# தமிழ், வங்காளத் தொன்ம மறுவாசிப்புப் புதினங்களில் 'சீதை' தொன்மம்

ஞா.சத்தீஸ்வரன்

*முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, விசுவபாரதி நடுவண் பல்கலைக்கழகம், சாந்திநிகேதன் – 731235 மேற்குவங்காளம்.*

மனிதச் சமூகம் காலந்தோறும் பெறும் அனுபவங்களின் வெளிப்பாடாக அமைவன தொன்மங்கள். கடந்தகாலத்தின் நினைவுகளையும் வரலாற்றையும் பண்பாட்டையும் நிகழ்காலத்திற்குக் கடத்தி வருபவையாக இத்தொன்மங்கள் செயல்படுகின்றன. அவ்வகையில் சமூகத்தின் பிரதிபலிப்பாக அமையும் இலக்கியங்களிலும் இத்தொன்மங்கள் காலந்தோறும் செல்வாக்கைச் செலுத்தி வருகின்றன. இந்தியச் சூழலில் புராணங்களைச் சார்ந்த தொன்மங்கள் இலக்கியப் பரப்பில் பெரும் தாக்கத்தைச் செலுத்துகின்றன. அவற்றில் 'சீதை' தொன்மம் முதன்மையானது. அதனடிப்படையில் தமிழ், வங்காளத் தொன்ம மறுவாசிப்புப் புதினங்களில் 'சீதை' தொன்மம் எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**தொன்மமும் தொன்ம மறுவாசிப்பும்**

'மித்(Myth)' என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு இணையாகத் தமிழில் 'தொன்மம்' என்னும் சொல் பயன்படுத்தப்படுகிறது. இச்சொல்லுக்குப் 'பழமை' என்பது பொருள். வடமொழியில் 'புராணம்' என்னும் சொல் இதற்கு இணையாகப் பயன்படுத்தப்படுகிறது. தமிழில் தொன்மத்தின் வரலாறு மிகவும் தொன்மையானது. தொல்காப்பியர் செய்யுள் உறுப்புகளாக எண்வகை வனப்புகளைச் சுட்டும்போது தொன்மையையும் அவற்றுள் ஒன்றாகக் குறிப்பிடுகிறார்.[1] புறநானூற்றில் பழம்பெருமை பேசிய அரசன் "தொன்மை சுட்டிய வன்மையோன்"[2] என்று மதுரைக் கணக்காயனாரால் குறிப்பிடப்படுகிறான். இதன்வழியாகத் தொன்மம் என்பது தமிழ் இலக்கியங்களில் பழங்காலம் முதலே பயன்படுத்தப்பட்டு வருவதை அறியலாம்.

இத்தொன்மங்கள் அவை தோன்றிய சமூகத்தைப் பிரதிபலிப்பதாக அமைவதால் பெரும்பான்மையான தொன்மங்கள் பழமையையும் பகுத்தறிவுக்கு எதிரான தன்மையையும் கொண்டிருப்பதைக் காணமுடிகிறது. எனினும் இதனைக் காரணம் காட்டி தொன்மங்களை முற்றும் விலக்கிவிட முடிவதுமில்லை. ஏனெனில், தொன்மங்கள் ஒரு சமூகத்தின் கூட்டு நனவிலியாக இயங்குபவை. அவை தனிமனிதர்களால் உருவாக்கப்படுபவை இல்லை. ஆகவே அவற்றை முற்றும் முழுவதுமாக எவராலும் புறக்கணித்துவிட முடிவதில்லை. "சமூகப் பிரக்ஞையை உருவாக்கும் மொழியாகவே தொன்மங்கள் விளங்குகின்றன. ஒருவன் அடையும் சமூகப் பிரக்ஞை அவனது இத்தகைய மொழித் திறத்தைச் சார்ந்திருக்கிறது என்பது மட்டுமல்ல, அவன் எத்தகைய சமூகப் பிரக்ஞையைப் பெற வேண்டும் என்று முன்னமே நிர்ணயிக்கும் சக்தியாகக் கூட இத்தகைய மொழி விளங்குகிறது. எனவேதான் உலகத்தின் எந்தப் படைப்பாளியும் இத்தொன்மங்களிடமிருந்து படைப்புத் தளத்தில் மட்டுமாவது விடுபட முடிவதில்லை. மேலும் படைப்புத் தொழிலுக்கே

அடிப்படையாக உள்ள எடுத்துரைத்தல் என்ற மனித மனப்பான்மையை இத்தொன்மங்கள்தாம் பிஞ்சு வயதிலேயே உருவாக்கி விடுகின்றன"[3] என்று பேராசிரியர் க.பஞ்சாங்கம் விளக்குகிறார்.

இந்த அடிப்படையில்தான் தொன்மங்கள் இலக்கியங்களில் மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அவ்வாறு பயன்படுத்தப்படும் இத்தொன்மங்கள் சமகாலத்தின் சமூக, அரசியல் மற்றும் பொருளியல் நிலைமைகளுக்கேற்ப மாற்றியமைக்கப்படுகின்றன. நிலவிவரும் சமூக அமைப்புக்கு ஏற்றவாறு தொன்மங்களை மாற்றியமைத்து இலக்கியங்களில் கையாள்வதைத் 'தொன்ம மறுவாசிப்பு' என்று அழைக்கின்றனர்.

இந்தியாவில் இராமாயணம், மகாபாரதம் ஆகிய இரு புராணங்களை அடிப்படையாகக் கொண்ட தொன்மங்கள் பெருமளவில் வழங்கப்பட்டு வருகின்றன. அவற்றுள்ளும் 'சீதை' தொன்மம் முதன்மையானதாக விளங்குகிறது. இராமாயணக் கதை வழங்கப்பெறும் மொழி, சமயம், நிலவியல், காலம் மற்றும் பண்பாட்டுச் சூழலின் அடிப்படையில் சீதை தொன்மம் பல்வேறு மாறுதல்களுக்கு உள்ளாகியுள்ளது. தொன்மங்களைச் சமகாலக் கருத்தியல் பின்புலத்துடன் மறுவாசிப்புக்கு உட்படுத்தி படைக்கப்படும் நவீன இந்தியப் புனைவுகளிலும் சீதை தொன்மம் முதன்மை இடம் பெற்று விளங்குவதைக் காணமுடிகிறது.

**தமிழ், வங்காளத் தொன்ம மறுவாசிப்புப் புனைகதைகளில் சீதை தொன்மம்**

தமிழில் ராஜம்கிருஷ்ணன் எழுதிய 'வனதேவியின் மைந்தர்கள்' புதினமும் வங்காளத்தில் மல்லிகா சென்குப்தா எழுதிய 'சீதாயணம்' புதினமும் இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. இவ்விரு புதினங்களும் வால்மீகியின் உத்தரகாண்டம் பகுதியை அடிப்படையாகக் கொண்டு மறுவாசிப்புக்கு உட்படுத்தி படைக்கப்பட்டவை. வால்மீகியின் மூலக்கதையை மாற்றாமல் அப்படியே வைத்துக்கொண்டு, அதன் மீதான பார்வையை மறுவாசிப்புக்கு உட்படுத்துபவையாக இப்புதினங்கள் அமைகின்றன. இவ்விரு புதினங்களிலும் சீதை கதாப்பாத்திரமே முதன்மைக் கதாப்பாத்திரமாகப் படைக்கப்பட்டுள்ளது. சீதையின் பார்வையிலிருந்து இராமாயணத்தை மறுவாசிப்பு செய்வதாகவே இவ்விரு புதினங்களும் அமைகின்றன.

வனதேவியின் மைந்தர்கள், சீதாயணம் ஆகிய இவ்விரு புதினங்களும் சீதையைப் பழங்குடி இனத்தைச் சேர்ந்தவளாகச் சித்தரிக்கின்றன. வால்மீகி படைத்துள்ள சீதையின் கதாப்பாத்திரத்தை அடிப்படையாகக் கொண்டே அமைக்கப்பட்டிருந்தாலும் இவ்விரு புதினங்களிலும் சித்தரிக்கப்படும் சீதை வால்மீகியின் சீதையிடமிருந்து மாறுபட்டவளாக அமைகிறாள். இப்புதினங்கள் அனைத்து உயிர்களிடத்திலும் அன்பு கொண்டவளாகச் சீதையைக் கட்டமைக்கின்றன. பார்ப்பனிய ஆண்மைய அரசதிகாரத்தின் ஆதிக்கச் சிந்தனையின் விளைவால் பாதிக்கப்பட்ட பெண்ணாகிய சீதை, அந்த அமைப்பிற்கு எதிராகப் போராடுபவளாகவும் தன்னைப் போலவே பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் சூத்திரர்களுக்காகக் குரல் கொடுப்பவளாகவும் இவ்விரு புதினங்களும் சீதையைக் கட்டமைக்கின்றன.

**சீதையின் உயிர்நேயம்**

இராமாயணத் தொன்மங்களை மறுவாசிப்புக்கு உட்படுத்தும் புதினங்களில் ஆண் கதாப்பாத்திரங்கள் மண்ணாசையில் வன்முறை வெறிகொண்டு ஆதிக்கத்தை நிலைநாட்டப் போரிட்டுக்கொண்டிருப்பவர்களாகவும், சீதை உள்ளிட்ட பெண் கதாப்பாத்திரங்கள் உயிர்கள் அனைத்தின் மீதும் அன்பும் நேயமும் கொண்டவர்களாவும் சித்தரிக்கப்படுகின்றனர். சீதை குழந்தைப் பருவத்திலிருந்தே உயிர்கள் அனைத்திடமும் அன்புகொண்டிருந்ததை, "வேதபுரி அரண்மனைத் தோட்டத்தில், பறவைகளுடனும், மான் – பசு – முயல், அணில் என்ற உயிரினங்களுடனும் தோழமை கொண்டு உலகை அன்பால் ஆளவந்ததொரு சிறுமியை நினைத்துக்கொண்டு வந்தேன். அந்தச் சிறுமி, அரண்மனையின் பெருந்தோளர்களினால் தூக்க இயலாத மூதாதையர் வில்லை, அனாயசமாகத் தூக்கி, அடிபட்டு விழுந்ததொரு கிளிக்குஞ்சைக் கையிலெடுத்து, தன் அன்பு வருடலாலேயே உயிர்ப்பித்த அதிசயம் கண்டிருக்கிறேன்"[4] என்று வனதேவியின் மைந்தர்கள் புதினத்தில் காட்டப்படுகிறது. இவ்வாறு ஆண்களைக் காட்டிலும் வலிமைமிக்கவளாகச் சித்தரிக்கப்படும் சீதை, தனது உடல் வலிமையினால் பிறர்மீது வன்முறையும் ஆதிக்கமும் செலுத்தாமல் அனைத்து உயிர்களிடத்திலும் அன்பு செலுத்துபவளாகச் சித்தரிக்கப்படுவதை இங்கு காணலாம்.

பறவைகளை விலங்குகளை வேட்டையாடுவதை சீதையால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. மனிதர்களைப் போலவே இயற்கையால் படைக்கப்பட்ட உயிர்கள் அனைத்தும் இந்த மண்ணில் வாழ்வதற்கான உரிமை பெற்றவை என்று சீதை வாதிடுவதாகத் தொன்ம மறுவாசிப்புப் புதினங்கள் சித்தரிக்கின்றன. இந்த உயிர்நேயமே ஆரியப் பேரரசின் அரசியான சீதையை அனாரியப் பழங்குடியினரின் நலன்களைக் குறித்தும் சிந்திக்க வைக்கிறது. இராமனுக்குக் கட்டுப்பட்டு நடப்பவளாக இராமாயணத் தொன்மத்தில் சித்தரிக்கப்படும் சீதை, அரசதிகாரத்தை எதிர்த்து கேள்வி கேட்பவளாக மாறுவதற்கான நியாயத்தை இந்த உயிர்நேயத்தின் வழியாகவே ராஜம்கிருஷ்ணனும் மல்லிகா சென்குப்தாவும் கட்டமைக்கின்றனர். எனவேதான், "அனார்ய மக்கள் காலங்காலமாக ஆரண்யபூமியில் வாழ்ந்து வந்திருக்கின்றனர். அந்த ஆரண்யத்தின் இங்குதி, நெல்லி, வில்வம்பழங்களை உண்டு அவர்களின் முன்னோர்கள் வாழ்ந்திருந்தனர்; அவர்களும் அந்தப் பழங்களுக்கு உரிமை உடையவர்கள். காய்ந்த மரங்களிலிருந்து அவர்கள் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக விறகுகளைச் சேகரித்து வருகின்றனர். இந்தத் தம்சா, சரயு, கங்கை, மந்தாகினியின் நீரில்தான் காலங்காலமாக மீன் பிடித்து வருகின்றனர். ஆனால், ஆரிய முனிவர்கள் மக்கள் கூட்டத்தைவிட்டு விலகி ஆரண்யபூமியின் உரிமையுடன் வனத்தில் உள்ள செல்வவளங்களால் ஈர்க்கப்பட்டனர். அனார்யர்களின் உணவு ஆதாரங்கள் குறைந்துபோயின. வனத்தின் உரிமையை அவர்கள் இழக்க விரும்பவில்லை என்றால், அவர்களைக் குற்றம் சொல்ல முடியுமா என்ன? அதனால்தான் அவர்கள் வெளியிலிருந்து வரும் ஆரியர்களைத் தாக்குகின்றனர். ஆனால், ஆரிய-சத்திரியர்கள் பிராமணர்களைக் காப்பதற்காக வலிமையான ஆயுதங்களுடன் வனபூமியின் ஆதிக்குடிகளின்மீது பாய்ந்தபோது, வேடனின் அம்புகளால் தாக்குண்ட கிரெளஞ்சப் பறவையைப்

போல ஆதரவற்ற அரக்கர்கள் கூட்டம்கூட்டமாகப் படுகொலை செய்யப்பட்டனர். இரகுகுலபதியிடம் பலமுறை நான் கெஞ்சிக் கேட்டேன், ஆனாலும் அவர் வன்முறையை நிறுத்தவில்லை."[5] என்று சீதை பார்ப்பன முனிவர்களின் நலன்களைக் காக்க, பழங்குடியினரை ஒடுக்கும் ஆரிய அரசர்களுக்கு எதிராகக் குரல் கொடுக்கிறாள்.

இயற்கையின் அனைத்து உயிர்களிடத்தும் அன்பும் நேயமும் கொண்ட பெண்ணாகிய சீதையால் ஆணதிகார அரசமைப்பின் வன்முறைகளை ஏற்றுக் கொள்ள முடிவதில்லை. எனவே, அவள் இந்த மண்ணின் பூர்வகுடிகளின் மீதான ஆரிய அரசர்களின் ஆக்கிரமிப்பை, போர்களை எதிர்க்கிறாள். அதன்வழியாக வனதேவியாக அனாரியப் பழங்குடியின மக்களால் கொண்டாடப்படுகிறாள் என்பதாக வனதேவியின் மைந்தர்கள், சீதாயணம் ஆகிய இரு புதினங்களும் கட்டமைக்கின்றன.

**பாலினச் சுரண்டலுக்கு எதிராகச் சீதை**

உலகெங்கிலும் பெண்ணடிமைத்தனம் வெவ்வேறு வடிவங்களில் நிலைபெற்றுள்ளது. இந்தியாவில் பெண்ணடிமைத்தனத்தை நிலைநிறுத்துவதில் பார்ப்பனிய வைதீக சமயத்தின் பங்கு முதன்மையானது. பார்ப்பனியம் பிறவி அடிப்படையிலான பாகுபாடுகளை இந்திய மண்ணில் நிலைநிறுத்தியுள்ளது. இவ்வாறு மதத்தின் பெயரால் கட்டமைத்த சமூக உளவியல்தான் பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளைப் பெண்ணடிமைக் கண்ணோட்டத்திலேயே பார்க்க வைக்கிறது. இந்தக் கண்ணோட்டத்தை வலுப்படுத்தும் வகையிலேயே புராணங்களும் தொன்மங்களும் செயல்படுகின்றன. இதனால்தான் "பெண்களைப் பற்றித் தந்தை வழியாட்சி முறைக்குச் சௌகரியமான – அரசியல் ரீதியிலான நம்பிக்கைகளின் பண்பிற்கு மானிடவியல், மதம், இலக்கியத் தொன்மம் ஆகியவை எல்லாம் ஒப்புதல் அளிக்கின்றன; இதற்கான ஆதாரங்களைக் கொண்டிருக்கின்றன."[6] என்கிறார், கேற் மில்லர்.

இவ்வாறு சமயப் புராணங்களும் தொன்மங்களும் பெண்களை ஒடுக்குவதற்கான நியாயங்களை வழங்குவதைத் தொன்ம மறுவாசிப்புப் புதினங்களில் கட்டமைக்கப்படும் சீதை வெளிப்படுத்துகிறாள். வனவாசத்திற்கு அனுப்பப்பட்ட சீதையை மீண்டும் ஏற்றுக்கொள்ள கற்புத்தன்மைக்கான உறுதியை ஏற்றுக்கொள்ளுமாறு இராமன் கூறும்போது, சீதை அதற்கு இணங்க மறுக்கிறாள். பார்ப்பனர்களின் சூழ்ச்சியை, ஆண்மைய அதிகாரத்தின் நுட்பங்களை உணர்ந்துகொண்ட சீதை வசிஷ்டரின் கருத்துகளை மறுக்கிறாள். "முனிவரே, கற்புத்தன்மை என்பது கட்டமைக்கப்பட்ட ஒன்று, பெண்களை அடக்கிவைப்பதற்காகத் தாங்கள்தான் அதனை உருவாக்கினீர்கள். கற்பு என்பது பெண்களுக்கு எதிராக நீங்கள் பயன்படுத்தும் ஆயுதம். ஆண்களுக்குக் கற்புத்தன்மை தேவை இல்லை என்றால் எதற்காகப் பெண்களுக்கு மட்டும் அது தேவைப்படுகிறது!"[7] என்று கற்பு என்பது பார்ப்பன ஆண்களால் கட்டமைக்கப்பட்டது என்று வாதிடுகிறாள். மரபு என்னும் பெயரால் பெண்களை ஒடுக்குவதை சீதைக் கேள்விக்குட்படுத்துகிறாள். "மனிதர்களின் தேவைகளுக்கேற்ப விதிகளை மனிதர்கள்தான் இயற்றுகின்றனர். சூழ்நிலைகளுக்கேற்ப பலமுறை பல விதிகளைத் தாங்களே, பிராமண ஆண்களே

மாற்றியமைத்திருக்கிறீர்கள்”[8] என்று பார்ப்பன ஆண்களால் கட்டமைக்கப்பட்ட விதிகளாலேயே பெண்கள் உரிமையிழந்தனர் என்பதை விளக்குகிறாள்.

மேலும், பெண்களின் தூய்மை, புனிதம் தொடர்பான ஆணாதிக்கக் கருத்தியல் அளவுகோல்கள் ஆண்களுக்கு அதனை வலியுறுத்துவதில்லை என்பதையும் சீதை குறிப்பிடுகிறாள். “எந்த அளவுகோலைக்கொண்டு பெண்களின் தூய்மையை நீங்கள் மதிப்பிடுகிறீர்களோ, ஆண்களின் விசயத்திலும் அதே அளவுகோல் ஏன் இல்லை? ஆண்கள் பெண்களின் எசமானர்கள், என்பதனால்தானே! எதற்காக எல்லா ஒழுக்கமற்ற, பெண்பித்துகொண்ட, வன்முறை, போர்க்குணமுள்ள ஆண்கள் அனைவரும் பெண்களுக்கு எசமானர்கள் ஆகவேண்டும்? ஆண்கள் அனைவரும் எந்தப் பெண்ணின் இரத்தமும் சதையும் கலந்து உருவாக்கப்பட்டீர்களோ, அந்தப் பெண்ணுக்கு உங்களது ஆரியப் பண்பாடு பெரும் அநீதி இழைக்க முயல்கிறது.”[9] என்று சீதை வாதிடுகிறாள்.

இவ்வாறு தூய்மை, புனிதம் என்னும் கருத்தியல்களால் கட்டமைக்கப்படும் பாலின ஏற்றத்தாழ்வுகளையும் ஒடுக்குமுறைகளையும் சீதை கேள்விக்குட்படுத்துகிறாள். “தசரதர் முந்நூற்றைம்பதுபேரை மனைவியராக்கிக் கொண்டு அன்னை கோசலையை நித்தியத் துன்பத்தில் ஆழ்த்தினாலும் கலங்கமற்றவராக இருக்கும்போது, பலவந்தமாகப் பலாத்காரம் செய்யப்பட்ட ஒரு அரசகுலத்துப்பெண் மட்டும் ஏன் தூய்மையவற்றளாகி விடுகிறாள்?”[10] என்று சீதை கேட்பது இராமாயணத் தொன்மம் கட்டமைக்க விரும்பும் ஆணாதிக்க நிறுவனத்தையே ஆட்டம் காண வைப்பதாக அமைகிறது.

**சாதிக்கு எதிராகச் சீதை**

இராமாயணத்தில் இடம்பெறும் சம்பூகன் தொன்மம், பார்ப்பன நலன்களை முன்னிறுத்தும் சாதிய அமைப்பைக் காப்பதற்கான இராமாயணத்தின் நோக்கத்தை வெளிப்படுத்துவதாகும். இதனைத் தொன்ம மறுவாசிப்புப் புதினங்கள் தெளிவாக விளக்குகின்றன. பார்ப்பனிய சாதியமைப்பின் புனிதத் தன்மையை நிலைநிறுத்தவும் ஆண்மைய அதிகாரத்தின் பெருமிதத்தைக் காக்கவும் பலியாக்கப்பட்ட தொன்மப் பாத்திரங்களே சீதையும் சம்பூகனும் என்பதை வனதேவியின் மைந்தர்கள், சீதாயணம் புதினங்கள் சித்தரித்துக் காட்டுகின்றன.

இராமாயணத் தொன்மம் சீதையை, ‘‘மண்ணிலே கிடைத்தவள். குலம் கோத்திரம் விளக்கும் பெற்றோர் அறியாதவள்”[11] என்பதாகக் கட்டமைக்கிறது. அவள் இராவணனின் கட்டுப்பாட்டிலிருந்து மீட்கப்பட்டதும் தீக்குளித்து தன்னைத் தூய்மையானவள் என்று நிறுவ வேண்டியுள்ளது. அதன் பின்னும் சந்தேகத்தின் பேரில் நிறைசூலியாக காட்டுக்கு அனுப்பப்படுகிறாள். “இதற்கெல்லாம் ஒரே காரணம், சீதையின் குலம் கோத்திரம் தெரியாத பிறப்பே என்று கொள்ளலாம். வருண தர்மமும், ஆண் ஆதிக்கமும், பெண்ணை ஓர் அடிமை நிலையிலும் இழிந்து தருமம் என்ற விலங்கால் பிணித்து வைத்த நிலை துலங்குகிறது.”[12] என்கிறார், ராஜம்கிருஷ்ணன்.

புராணங்களுக்கு மாற்றாக, தொன்ம மறுவாசிப்புப் புதினங்களில் ஆண்மைய அரசதிகாரத்தினாலும், சாதிய நிறுவனத்தாலும் பாதிக்கப்பட்ட சீதை தன்னைப் போலவே

பாதிக்கப்பட்ட பழங்குடியினருக்காகவும் குரல் கொடுப்பதாகப் படைக்கப்படுகிறாள். வனதேவியின் மைந்தர்கள் புதினத்தில் சிறுவயது முதலே சாதிய ஏற்றத் தாழ்வுகளுக்கும் வர்க்கப்பிரிவினைகளுக்கும் எதிரான மனநிலையை உடையவளாகச் சீதை படைக்கப்பட்டிருக்கிறாள். "எல்லோரும் ஒற்றுமையாக அவரவர் தருமத்தைப் பாலித்து வாழ வேண்டும்; இல்லையேல் ஆபத்தை விளைவிக்கும் என்று ஆன்றோர் எச்சரித்திருக்கிறார்கள்"[13] என்று இராமன் குறிப்பிடும்போது சீதை அதனை மறுக்கிறாள். "அவரவர் தருமம் என்றால் என்ன? க்ஷத்திரியனுக்குக் கொல்லும் தருமம், அதுதானே? என் கையைப் பற்றியிருக்கும் இந்தக்கரம், எளியோரைப் பாதுகாக்கும் ஆதரவுக்கரம் என்று நம்புகிறேன். ஆனால், இது, பெண், விலங்கு, மனிதர் என்று பாகுபாடில்லாமல் கொன்று குவித்திருக்கிறது."[14] என்று கண்டிக்கிறாள்.

எந்த இயல்பும் பிறப்பின் அடிப்படையிலோ சாதியின் அடிப்படையிலோ அமைவதில்லை என்பதை சீதை மீண்டும் மீண்டும் குறிப்பிடுகிறாள். "அனார்ய அரக்கர்களின் தாக்குதலால் பாதிக்கப்பட்ட பிராமணர்களின் ஆசிரமங்களைப் பார்த்ததைப் போலவே அனார்யர்களின் ஆயிரமாயிரம் ஆண்டுகால வாழ்விடத்தைவிட்டு அவர்களை வேரோடு பிடுங்கியெறிய பிராமண–சத்திரியர்கள் செய்யும் முயற்சிகளையும் பார்த்திருக்கிறேன். கணவர் இராமச்சந்திரனது அனார்யர்களின் மீதான வெறுப்பினாலும் அனார்யர்களின் பழிவாங்கலாலும் என் வாழ்க்கையே சுக்குநூறாகிவிட்டது. மேலும் என்ன சொல்வேன், பக்தியுள்ள இராகவனின் தூய அன்பின் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதைப் போலவே, அனார்ய இராவணனின் ஆண்மைமிக்க உடலும் காதலை இறைஞ்சி அடிபணிந்ததைக் கண்டேன்."[15] என்று அனாரியர்களும் மனிதர்களே என்பதை விளக்குகிறாள். இராமன், இலட்சுமணன் உள்ளிட்ட அரசகுலத்து ஆண்களும் பார்ப்பன முனிவர்களும் அனாரியப் பழங்குடியினர் மீது வெறுப்பு கொண்டு அவர்களை அழித்தொழிக்க விரும்பும்போது சீதை மட்டுமே அவர்களும் மனிதர்கள்தான் என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறாள்.

"மேற்குலம் மட்டுமே வாழவேண்டும் என்ற ஒரு தர்மம் உண்டா? இந்த உலகில் அவர்கள் ஆதிக்கம் செலுத்துவது தர்மம் என்றால், அந்த தர்மம் நிலைக்குமா?"[16] என்று சீதை கேள்வி எழுப்புகிறாள். இராமனுக்காகத் தனது வாழ்வையே அர்ப்பணித்துக்கொள்பவளாக இராமாயண காவியத்தில் படைக்கப்பட்டிருக்கும் சீதை, இராமனது இராஜ்ஜியத்தையே நிலைகுலையச் செய்பவளாக மறுவாசிப்புக்கு உட்படுத்தப்படுகிறாள். "அரசனுக்கு அணிசேர்ப்பது குடிகளைக் காப்பது, எதற்காக என்னைத் தசரதபுத்திரன் கைவிட்டானோ, அந்தக் கடமையுணர்வு எங்கே போனது ஒரு அப்பாவி சூத்திரனை வெறுமனே தவம் செய்தற்காகப் பிராமணர்களின் தூண்டுதலால் கொலை செய்தபோது? சூத்திரன் குடிமகன் இல்லையா? பெண் குடிமகள் இல்லையா? அட ச்சீ, இந்த அரசின் கொள்கையும், இராமராஜ்ஜியமும் ச்சீ!"[17] என்று இராமராஜ்ஜியம் என்பது பெண்களுக்கும் சூத்திரர்களுக்கும் எதிராக இருப்பதைத் தோலுரித்துக் காட்டுகிறாள். இவ்வாறு கொல்லப்பட்ட அனாரியர்களுக்காகத் தனது ஆரிய குலத்திற்கு எதிராகவும் சாதிய அமைப்பிற்கு எதிராகவும் போராடுபவளாகத் தமிழ், வங்காளத் தொன்ம மறுவாசிப்புப் புதினங்களில் சீதை பாத்திரம் அமைக்கப்பட்டுள்ளது.

**நிறைவாக**

ராஜம்கிருஷ்ணனின் ‘வனதேவியின் மைந்தர்கள்’ புதினமும், மல்லிகா சென்குப்தாவின் ‘சீதாயணம்’ புதினமும் ஆணாதிக்கம் மற்றும் சாதிய ஒடுக்குமுறையின் இயங்கியலை வெளிப்படுத்தும் நோக்கில் படைக்கப்பட்டுள்ளதைப் புரிந்துகொள்ள முடிகிறது. படைப்பாளர்களின் இந்த நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கு ஏற்ற வகையில் சீதை தொன்மம் அவர்களால் பயன்படுத்தப்பட்டுள்ளது. “நிகழ்காலத்தில் நம்மைச்சுற்றி நடக்கும் நிகழ்வுகளின்மேல் எழுதப்படும் புனைவுகளைவிட, ஏற்கனவே கட்டப்பட்டு, பெருவாரி மனங்களைப் போய்ச் சென்றடைந்துள்ள தொல்கதைகளின் மேல் நிகழ்த்தப்படும் மொழியாடல்களுக்குக் கூடுதலான வாசிப்புக் கவர்ச்சி உண்டு. படைப்பாளிகளுக்கும் இலக்கிய அழகியலைத் தங்கள் எழுத்துக்குள் எளிதாகச் சாதித்துவிட வாய்ப்புகள் அதிகம். தொன்மங்கள் மனித மனங்களின் குறியீடுகளாக, உருவகங்களாக, இயங்கிக் கொண்டிருப்பதனால் தொடர்ந்து படைப்பிற்கான நிகரற்ற கருவூலமாகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டு வருகின்றன.”[18]என்கிறார், பேராசிரியர் க.பஞ்சாங்கம். அவ்வகையில் சமகால அரசியல், சமூகச் சிக்கல்களை வெளிப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் தமிழ், வங்காளத் தொன்ம மறுவாசிப்புப் புனைகதைகளில் சீதை தொன்மம் பயன்படுத்தப்பட்டுளளதை அறிய முடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. சுப்பிரமணியன். ச.வே., நூற்பா எண் 235, செய்யுளியல், தொல்காப்பியம் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2019.
2. இளங்குமரன். இரா., (உரையாசிரியர்), பாடல் எண் 330, புறநானூறு, சங்க இலக்கியம் தொகுதி 10, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 2022.
3. பஞ்சாங்கம், க, ப.161, இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும், அன்னம், தஞ்சாவூர், 2011.
4. ராஜம்கிருஷ்ணன், ப.22, வனதேவியின் மைந்தர்கள், தாகம் பதிப்பகம், சென்னை, 2007.
5. மல்லிகா சென்குப்தா, ப.36, சீதாயணம், அணங்கு வெளியீடு, பாண்டிச்சேரி, 2024.
6. கேற் மில்லர், ராஜ் கௌதமன்(மொழிபெயர்ப்பாளர்), ப.103, பாலியல் அரசியல், என்சிபிஎச், சென்னை, 2021.
7. மல்லிகா சென்குப்தா, ப.194, சீதாயணம், அணங்கு வெளியீடு, பாண்டிச்சேரி, 2024.
8. மல்லிகா சென்குப்தா, ப.140, சீதாயணம், அணங்கு வெளியீடு, பாண்டிச்சேரி, 2024.
9. மல்லிகா சென்குப்தா, ப.42, சீதாயணம், அணங்கு வெளியீடு, பாண்டிச்சேரி, 2024.
10. மல்லிகா சென்குப்தா, ப.41, சீதாயணம், அணங்கு வெளியீடு, பாண்டிச்சேரி, 2024.
11. ராஜம்கிருஷ்ணன், ப.3, வனதேவியின் மைந்தர்கள், தாகம் பதிப்பகம், சென்னை, 2007.
12. ராஜம்கிருஷ்ணன், ப.8, வனதேவியின் மைந்தர்கள், தாகம் பதிப்பகம், சென்னை, 2007.
13. ராஜம்கிருஷ்ணன், ப.61, வனதேவியின் மைந்தர்கள், தாகம் பதிப்பகம், சென்னை, 2007.
14. ராஜம்கிருஷ்ணன், ப.61, வனதேவியின் மைந்தர்கள், தாகம் பதிப்பகம், சென்னை, 2007.
15. மல்லிகா சென்குப்தா, ப.45, சீதாயணம், அணங்கு வெளியீடு, பாண்டிச்சேரி, 2024.

16. ராஜம்கிருஷ்ணன், ப.61, வனதேவியின் மைந்தர்கள், தாகம் பதிப்பகம், சென்னை, 2007.
17. மல்லிகா சென்குப்தா, ப.191, சீதாயணம், அணங்கு வெளியீடு, பாண்டிச்சேரி, 2024.
18. பஞ்சாங்கம், க., ப.106, தமிழ்ச் சிறுகதைகளும் மனிதப் பெருவெளியும், பரிசல் வெளியீடு, சென்னை, 2019.

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.